# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

# L.A.O.P. No.43/2019

நாள் : 21.03.2024

**பெயர் : அப்பாராஜ்**

**PW1**

**குறுக்கு விசாரணை**

மற்ற குடும்ப உறுப்பினர்களுக்காக நான் சாட்சியம் அளிக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. LAOP 44/2019 ல் மனுதாரர் என் மனைவி LAOP 45/2019 நான் தான் மனுதாரர் . LAOP 46/2019 நானும் எனது மகனும் மனுதாரர்கள். LAOP 43,44,45,46/2019 வழக்கின் இழப்பீட்டு தொகையை ஆட்சேபனையுடம் பெற்றுக் கொண்டுள்ளேன். மேற்படி இழப்பீட்டு தொகையினை நான் முழு மனதுடன் தான் பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல. இழப்பீட்டு விவரத்தினை எனது பிரமாண பத்திரத்திலோ, மனுவிலோ கூறவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் அல்லது மனுவிலோ எனக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டு தொகையின் விவரங்களை கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நான் அரசிடம் இருந்து கூடுதல் இழப்பீட்டு தொகையினை பெற வேண்டும் என்ற காரணத்தினால் அதனை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. சென்னை உயர் நீதிமன்றம் WPN. 3869/2015 ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின் படி இழப்பீட்டு தொகை 1,55,569/- பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். அது போல் LAOP 44/2019 ல் WPN.3486/2015 படி ரூ. 4780677/- மனுதாரர் இந்திராவுக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு WPN.3489/2015 ன் உத்தரவின் படி ரூ.4484076/- தொகை வழங்கப்பட்டது என்றால் சரிதான். மனு எண். LAOP 46/2019 ல் WPN.3485/2015 ன் உத்தரவின் படி ரூ. 2055444 தொகை வழங்கப்பட்டது என்றால் சரிதான். LAOP 43,44,45,46/2019 அனைத்திலும் ஒரே புல எண் என்று பிரமாண பத்திரத்தில் கூறியுள்ளது என்றால் சரிதான். நஞ்சை, புஞ்சை நிலங்கள் வகைபாடு உடைய நிலங்கள் விலையில் அதன் தன்மை குறித்து மாற்றம் இருக்கும் என்று சொன்னால்

சரிதான். அரசால் என் நிலம் கையகப்படடுத்தப்பட்டதற்கு அருகில் உள்ள நிலங்களின் சந்தை மதிப்பை காட்ட கூடிய ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அரசால் கையகப்பட்டுத்தப்பட்ட நிலங்கள் நாகை நகராட்சிக்கு அருகில் இருந்தாலும் அவை முட்டம் என்கிற சிறு கிராமத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். கையகப்பட்டுத்தப்பட்ட நிலத்திற்கும் ONGC க்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கையகப்பட்டுத்தப்பட்டுள்ள நிலம் என் கைவசம் இல்லை. கையகப்படுத்தப்பட்ட நிலங்களை நான் பயன்படுத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் ஸ்தலத்தில் உள்ள மரங்கள் வகைபடுகள் குறித்து அறிக்கையாக தாக்கல் செய்யப்படுள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையர் இடத்தை பார்வையிடும் போது புல எண், விஸ்திரனம், விவரங்கள் ஆணையர் பார்வையிடாமல் திரும்ப வந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டு தொகையினை விட அதிகமான இழப்பீட்டு தொகை பெற்றுக் கொண்டு கூடுதலாக இழப்பீட்டு தொகை பெறுவதற்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.